Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

**2008 Public Examination**

# Tamil
## Continuers Level

**Thursday 16 October: 2 p.m. Eastern Standard Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 50 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 50 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2008*

**Part A** (Questions 1–3)
(20 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks** | You may make notes in this space.

**Text 1**

1. What three options was Peter offered for the return of the lost item? **3**

- ________________________________________
- ________________________________________
- ________________________________________

| | Marks | You may make notes in this space. |
|---|---|---|

**Text 2**

2. (a) Why could Vimala not attend the wedding? **1**

(b) What did Seelan think of the wedding? **5**

Marks | You may make notes in this space.

**Text 3**

3. (a) Who made this speech and under what circumstances? **2**

(b) What does the speaker mean by the first and second golden days? **3**

(c) What are the purposes of Mathumitha's work and how does she attempt to achieve this? **3**

(d) To whom does Mathumitha give thanks? Why? **3**

**Part B** (Questions 4–5)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information;*
- *convey the information accurately and appropriately.*

---

You will hear TWO texts, one relating to Question 4 and one relating to Question 5. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks**

You may make notes in this space.

**Text 4**

4. Explain three cases where passengers might have difficulties if they have not heard all of this announcement. **5**

இந்த அறிவிப்புக்களைப் பூரணமாகக் கேட்கத்தவறிய பிரயாணிகளில் பிரச்சனைகளை எதிர்நோக்கக் கூடிய மூன்று வகையினரைப் பற்றி விளக்குக.

Marks

You may make notes in this space.

**Text 5**

5. Describe in a paragraph the best candidate for this position. **5**

   இப் பதவிக்கு மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரி பற்றி பந்தி ஒன்றில் விபரிக்குக.

**End of Section 1**

| Student/Registration Number | | | | | | | | | | | | Centre Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

**2008 PUBLIC EXAMINATION**

# Tamil

## Continuers Level

### Section 2: Reading and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 15 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in blue or black ink or ball-point pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

© Victorian Curriculum and Assessment Authority 2008

**Part A** (Questions 6–7)
(20 marks)

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and/or specific aspects of texts, by, for example, comparing, contrasting, summarising, or evaluating, and convey the information accurately and appropriately.*

6. Read the text and then answer in ENGLISH the questions that follow.

இன்று தமிழகத்தின் பிரதான நகரங்களில் மட்டுமல்ல கிராமங்களிலும் கூட உடற்பயிற்சி நிலையங்கள் (Gymnasiums) பெருகி விட்டன. பாரந்தூக்கும் போட்டிகள் அல்லது ஆணழகன் போட்டிக்குச் செல்வதற்கான பயிற்சி நிலையம் என்று சிலவருடங்களுக்கு முன்பு கருதப்பட்ட இந்த நிலையங்கள், இன்று பாடசாலை மாணவர்கள் தொடங்கி ஓய்வு பெறும் வயதில் உள்ளவர்கள் வரை பயன்படுத்தும் நிலையங்களாக மாறிவிட்டன. பலவேலைத் தலங்களே தமது பணியாளர்களுக்கான உடல் நலத்தில் அக்கறை கொண்டு இவ்வாறான நிலையங்களை ஆரம்பித்துள்ளன. தம் பகுதி மக்களுக்கென உள்ளூராட்சி மன்றங்களும் பலகிளைகளைத் திறந்துள்ளன. இவை நியாயமான கட்டணங்களை அறவிடுகின்றன. உடலைக் கட்டுமட்டாக வைத்திருக்க விரும்பும் ஆண்களும் பெண்களும் ஏதாவது உடற்பயிற்சி நிலையங்களுக்குச் செல்கிறார்கள். இயந்திரமயமான வாழ்வில், ஒழுங்காக உண்ணவோ தூங்கவோ வசதிகுறைந்த நிலையில், வீட்டில் உடற்பயிற்சிக்கு எங்கே வசதி வரப்போகிறது? ஆசனத்தில் இருந்தபடி கணினிகளில் வேலை செய்பவர்களுக்கு, உடல் எடை அதிகரிப்பதுடன், பல நோய்களும் ஏற்படுகின்றன. இவர்களுக்கு இந்த நிலையங்களுக்குச் செல்வது அவசியமாகப் போய்விட்டது. வளர்ந்த மாணவர் மத்தியில் இது ஒரு நாகரிகமாக ஆகிவிட்டது. வைத்தியர்கள் பலர் தமது நோயாளிகளுக்கு இவற்றைச் சிபாரிசு செய்கிறார்கள். இளம் மாணவர்களின் பெற்றோர்கள் கூடத் தங்கள் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் அதிகரிக்கும் என்ற எண்ணத்தில், அவர்களை உடற்பயிற்சி செய்ய ஊக்குவித்து வருகிறார்கள். இதனால் பல கல்லூரிகளும் சில உபகரணங்களைப் பயன்படுத்த ஒழுங்கு செய்துள்ளன.

மக்களிடத்தில் இதற்கான தேவை கூடக்கூட, பலர் இலாபநோக்கில் இந்த நிலையங்களை ஆரம்பிக்கிறார்கள். சிலர் குறிப்பிட்ட சில, அல்லது தரக்கட்டுப்பாடில்லாத உபகரணங்களை மட்டும் கொண்டு பொருத்தமற்ற, காற்றோட்டம் இல்லாத கட்டடங்களில் அவசர அவசரமாக ஆரம்பிக்கிறார்கள். பலநிலையங்களில் முறையான பயிற்சியாளர்களும் இல்லை. பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பணம் செலவிடவும் நிலைய உரிமையாளர்கள் பின்னிற்கிறார்கள். சில நிலையங்கள், பெருந்தொகைக் கட்டணங்களை ஆரம்பத்திலும் பின் தொடர்ந்து பயிற்சிகளின் போதும் அறிவிடுகின்றன.

உள்ளூராட்சி மன்றங்களால் நடத்தப்படும் நிலையங்களில் முறையான பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் இவை ஒவ்வொன்றிலும் எல்லா உபகரணங்களையும் காண இயலாது. ஆயினும் மாநகர நிலையம் ஒன்றில் பயிற்சி பெற அனுமதிபெற்ற ஒருவர் அதன் எந்தக் கிளையிலும் பயிற்சி பெறலாம்.

பயிற்சி பெறாத அல்லது அரைகுறைப் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களிடம் பயில்வது பொருத்தமற்றது. இத்தகைய பயிற்சிகளை ஆரம்பிக்கமுன் வைத்திய பரிசோதனை செய்வது, குறிப்பாக இதயம், நுரையீரல் பற்றிய நிலையை அறிந்துகொள்வது அவசியம். சில நிலையங்களில் கொழுப்பைக் கரைப்பதற்கும் உடலை உற்சாகப்படுத்தவும் பல மருந்துகளை விற்கிறார்கள். இவை உடலுக்குத் தீமையானவை. இந்த நிலையிலாவது அரசாங்கம் தலையிட்டு இந்த நிலையங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவது அவசியமாகும்.

QUESTIONS

**Marks**

(a) Complete the following columns. **6**

| Demand for new gymnasiums | Ways in which the demand is being met |
|---|---|
| | |

(b) What problems are associated with the newly established gymnasiums? **3**

(c) What is the author requesting? **1**

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

அன்பான பத்திரிகை ஆசிரியர்,
தமிழ்க்குரல்

இன்று மீள்கலக்கம் என்ற பெயரில் பழைய சினிமாப் பாடல்களுடன் புதிய சில சொற்கள், வசனங்கள், மெட்டுக்கள் முதலியவற்றையும் சேர்த்துப் பாடல்களை உருவாக்கும் வழக்கம் தோன்றியுள்ளதே இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்? இது ஒருபகுதியினரைத் திருப்திப்படுத்துகின்ற அதேசமயம் இன்னோரு பகுதியினரை வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது. முன்பு கண்ணதாசன், வாலி போன்ற பார்போற்றும் பாடலாசிரியர்கள் படத்தின் கதையைக்கேட்டு, சூழ்நிலையை நன்கு அறிந்து அதற்கேற்ற கருத்துக்களையும் சொற்களையும் கொண்டு பாடல்களை எழுத, இசை அமைப்பாளர்கள் அவற்றை இனிமையாக இசையமைக்க, பாடகர்கள் பாடினார்களே இவற்றை நீங்கள் நன்கு அறிவீர்கள் தானே?

இன்று யாரோ ஒருவர் இசையமைக்க, இன்னொருவர் சொற்களை (அவை கருத்துடையனவாக இருந்தாலென்ன கருத்தற்றவையாக இருந்தால் என்ன) அடுக்கிப் ‘பாடல்களை’ எழுதுகிறார்கள். கதைக்கும் பாடல்களுக்கும் எந்தத்தொடர்பும் இருப்பதில்லை. சொற்களுக்கும் பஞ்சம், எனவே பழைய பாடல்களில் கைவைக்கிறார்கள். சொற்பஞ்சம் கருத்துப்பஞ்சம் புலமைப்பஞ்சம் என எல்லாமே பஞ்சம் என்பதால் வந்த வினை.

இதனால் பெரும்பாலான பழைய பாடலாசிரியர்கள், இரசிகர்கள், இசையமைப்பாளர்கள் மிகுந்த மனவேதனை அடைவதாகத் தெரிவிக்கிறார்கள். 40 வருடங்களின்முன் தொழில் நுட்ப வசதிகள் குறைவாக இருந்த காலத்தில் தாம் உருவாக்கிய பாடல்கள் சீரழிக்கப் படுவதாக அல்லது தங்கள் சம்மதம் இன்றிக் கொச்சைப் படுத்தப்படுவதாக அச்சாதனையாளர்கள் வேதனைப்படுகிறார்கள். பார்த்து, இரசித்து இன்றும் கற்பனை உலகில் தாங்கள் மிதக்கும் நிலைக்கு, பங்கம் வந்ததாக, இசையின் சீவனே அழிந்துவிட்டதாக, பழைய இரசிகர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

“பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கையின் நியதி. எனவே இளைஞர்கள் இடத்தில் பெரிதும் வரவேற்பைப் பெறுகின்ற மீள் கலக்கல் பாடல்களை, எல்லோரும் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்” என்று ஒரு சாரார் சொல்வதை நான் அறிவேன். “இவற்றைக் கேட்கும் போது ஒவ்வொருவரையும் ஆடத்தூண்டுகின்றது. ஆகவே இத்தகைய பாடல்கள் அதிகம் தோன்ற வேண்டும்” என்று இளைஞர் பலர் கூறுகின்றார்கள். பழமை என்பதற்காக அருமையானதொன்றைத் தள்ளி விடவோ புதுமை என்பதற்காகப் பெருமை தராத ஒன்றை ஏற்றுக்கொள்ளவோ முடியாது. இவை எனது அபிப்பிராயங்கள் ஆகும்.

ஏனைய வாசகர்களின் கருத்துக்களையும் உங்கள் பத்திரிகையில் காண விரும்புகிறேன். தயவுசெய்து எனது கருத்துக்களை உங்கள் பத்திரிகையில் பிரசுரித்து உதவுங்கள்.

தங்கள் அன்புள்ள
மகாதேவன்

QUESTIONS

**Marks**

(a) What does the author see as the significant differences between old and new songs? **6**

(b) How does the author of this article seek to appeal to the emotions of the reader? **4**



PLEASE TURN OVER

**Part B** (Question 8)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of a text by identifying, analysing, and responding to information;*
- *convey information coherently (structure, sequence, accuracy and variety of vocabulary and sentence structure) and appropriately (relevance, use of conventions of the text type).*

---

8. Read the text and then answer the question in 150–200 words in TAMIL on page 7.

நேற்று நானும் அபிராமியும் சுவையகத்தில் சாப்பிட்டோம். நன்றாகச் சாப்பிட்டு முடிய, பரிசாரகர் (Waiter) பணச்சிட்டையைக் கொண்டுவந்து தந்தார். 500 ரூபாத் தாளை எடுத்து வைத்தேன். அதைக்கண்ட அபிராமி "வழக்கமாக முகத்தைச் சுழித்துக்கொண்டு பணத்தைக்கொடுக்கின்ற நீங்கள் புன்சிரிப்போடு எடுத்து வைக்கிறீர்களே என்ன விசேடம்" என்று கேட்டார். "இரண்டு விசேட குளிர்களிகளுக்கும் கணக்குச் சேர்க்கப்படவில்லை 60 ரூபா இலாபம்" என்றேன். "சாப்பிட்ட பொருளுக்குப் பணம் கொடுக்காவிட்டால் உண்டது சமிபாடு அடையாது" என்று சாபம் போட்டார்.

"சரி காசாளரிடம் சொல்லி 60 ரூபாவைக் கொடுக்கிறேன்" என்றேன் விருப்பமில்லாமல்.

"ஏன்அப்படி? நீங்கள் 'திருவாளர் சுத்தம்' என்ற பெயர் வாங்குவீர்கள், அப்பரிசாரகருக்கு வேலை போய்விடும், அதுசரியில்லை" என்று கூறிய அபிராமி, காசாளர் அருகே பணம் செலுத்த நின்ற பரிசாரகரைத் தனியே அழைத்து, மெல்லிய குரலில் விடயத்தைச் சொன்னார். அவரும் பதற்றத்துடன் தனியாக இன்னொரு 60 ரூபாய்க்கு குளிர்களிக்கான சிட்டையைத் தந்து பணத்தைப்பெற்றுக்கொண்டார்.

நேர்மையாக இருந்து பயனில்லை; நல்லவருக்கு இது காலம் அல்ல; ஏமாற்றுபவர்களுக்கும் வல்லவர்களுக்குந்தான் காலம்; என்று நினைத்துக்கொண்டு உந்துருளியை (motorbike) உதைத்தேன். பின்னால் ஏறிய அபிராமியிடம் "உங்கள் நேர்மைக்குக் கிடைத்த பதக்கத்தைக் கவனமாக வைத்திருங்கள்" என்றேன் கிண்டலாக. அபிராமி வாய் திறக்குமுன் பரிசாரகர் பின்னால் ஓடி வந்தார். "இது உங்களுடைய கைத்தொலைபேசியா? கைகழுவும் இடத்தில் இருந்தது" என்றார். "ஆம் போன வாரம்தான் பத்தாயிரம் ரூபாவுக்கு வாங்கினேன்" என்றேன். அதைப்பெற்ற அபிராமி "பதக்கத்தை மிகவும் கவனமாக வைத்திருக்கிறேன்" என்றார்.

QUESTION

You were very excited when your elder brother recounted this event to you. Write a letter to your sister-in-law, Abirami, in response.

உமது அண்ணா கூறிய இச்சம்பவத்தைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்டுள்ள நீர் உமது அண்ணி அபிராமிக்கு அதுபற்றி ஒருகடிதம் எழுதுக.

*Do not remove this page from the question booklet.*

| Student/Registration Number | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

Tamil
Continuers Level

| Centre Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

Question 8



PLEASE TURN OVER

**End of Section 2**

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

## 2008 PUBLIC EXAMINATION

# Tamil
## Continuers Level

### Section 3: Writing in Tamil (15 marks)

**Instructions to Students**

1. Allow approximately 45 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2008*

**Section 3** (Questions 9–12)
(15 marks)

---

*When judging performance in this section, the examiner(s) will take into account the extent to which the student demonstrates:*

- *relevance and depth of treatment of ideas, information, or opinions;*
- *accuracy and range of vocabulary and sentence structures;*
- *the capacity to structure and sequence response and capacity to use conventions of the text type.*

---

Answer ONE question from this section in 200–250 words in TAMIL.

9. You have researched the advantages and disadvantages of sending children to childcare centres. Write an evaluative article for a Tamil newspaper.

   பிள்ளைகளை, பிள்ளை பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்புவதால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆய்வு செய்துள்ள நீர், தமிழ்ப்பத்திரிகை ஒன்றுக்கு அவற்றை மதிப்பீட்டுக் கட்டுரையாக எழுதுக.

10. Write a report informing your careers teacher about a week's work experience organised by your school.

    உமது பாடசாலையால் ஒழுங்கு செய்யப்பெற்ற ஒரு வார வேலை அனுபவம் தொடர்பான தகவல்களைத் தெரிவிக்கும் உமது அறிக்கையை வேலை அனுபவத்துக்குப் பொறுப்பான ஆசிரியருக்கு வழங்குவதற்காகத் தயாரிக்குக.

11. As a Tamil student representative, write the text of a speech to persuade parents to begin some activities to develop friendship among schools.

    தமிழ் மாணவர் பிரதிநிதி என்ற வகையில் பாடசாலைகளில் கற்பித்தலைவிட பாடசாலைகளிடையே நட்புறவை வளர்க்கக்கூடிய சில செயற்பாடுகளை ஆரம்பிக்கத் தூண்டும் வகையில் பெற்றோர்களுக்கான பேச்சு ஒன்றைத் தயாரிக்க.

12. Write an imaginative story about a letter found in an old bottle in the sand.

    மணல் தரையில் கிடந்த பழைய போத்தலின் உள்ளே காணப்பெற்ற கடிதம் ஒன்று பற்றிய கற்பனைக் கதையினை எழுதுக.

You may make notes in this space.

Question Number:

**End of Section 3**